சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

மனு எண். எம்.சி.ஓ.பி. 31/2021

PW - 2

2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17 ம் நாள் வெள்ளிக்கிழமை (1989 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி) திரு.எம்.மணிகண்டன், எம். ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | செந்தில் |
| க.பெ. (அ) த.பெ. | கிருஷ்ணசாமி |
| வயது | 44 |
| முகவரி | K.நாகூர் |

**முதல் விசாரணை**

நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் சந்தியா பார்ம்ஸில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியம்அளிக்க கொடுக்கப்பட்ட அங்கீகார கடிதம் **சாசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எங்களது நிறுவனத்தில் இறந்துபோன ஜோதிலிங்கம் எத்தனை ஆண்டுகளாக பணிபுரிந்து வந்தார் என்று கேட்டால் 2019 ல் சேர்ந்து 2020 ம் ஆண்டு இறந்துவிட்டார். அவர் என்னவாக எங்களது நிறுவனத்தில் Polutry Farm ல் மேலாளர், பொறுப்பு மேலாளராக பணியாற்றி வந்தார். இறந்துபோன ஜோதிலிங்கம் எங்கள் நிறுவனத்தில் பணியாற்றியதற்கான Service Certificate நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகிறது. அது ஆட்சேபணைக்குட்டு **சாசாஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இறந்துபோன ஜோதிலிங்கம் எங்கள் நிறுவனத்தில் இறுதியாக ரூ11,000/- பெற்று வந்தார், மேலும் Farm visit செல்வதற்கு தலா ரூ.1000/- என்ற

வகையில் ரூ4,000/- சேர்த்து மொத்தம் ரூ.15,000/- பெற்று வந்தார் அது எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணைக்குட்பட்டு **சாசாஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் எதிர்மனுதாரருக்கு வழங்கப்பட்டட சம்பளமானது அவரது வங்கி கணக்கிற்கு நேரடியாக மாற்றம் செய்யப்படும். அதை காட்டுவதற்காக ஆவணம் **சாசாஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சந்தியா பார்ம்ஸ் -ல் எந்த வருடத்தில் இருந்து பணியாற்றி வருகிறேன் என கேட்டால் 2018 ல் இருந்து வேலை பார்த்து வருகிறேன். நான் மேலாளராக பணியாற்றி வருகிறேன். அந்த நிறுவனத்தில் சுமார் 40 நபர்கள் வேலை பார்த்து வருகிறார்கள். அங்கு வேலை செய்யும் நபர்களுக்கு வருகை பதிவேடு, சம்பள ledger, PF பிடித்தம் போன்றவை செய்யப்படுகிறதா என்றால் செய்யப்படுகிறது, பதிவேடுகள் பராமரிக்கபடுகிறது. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையா என்றால் தாக்கல் செய்யவில்லை, நீதிமன்றம் கோரினால் தாக்கல் செய்ய முடியும். இறந்துபோன நபர் எனன படித்துள்ளார் என்று கேட்டால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் அவரை வேலைக்கு எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். இறந்து போன நபர் என்ன வேலைக்கு எடுக்கப்பட்டார் என்பதை பொறுத்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் நான் தாக்கல் செய்துள்ள வங்கி சம்பந்தப்பட்ட ஆவணத்தில் இறந்துபோன நபருக்கு எத்தனை முறை சம்பளம் கொடுக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது என்று கேட்டால் 6 முறை கொடுக்கப்பட்டதாக

கூறப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் சாசாஆ 4 ஆவணத்தில் ஜோதிலிங்கம் என்ற பெயர் குறிப்பிட்டு இருக்கவில்லை என்றால் சரிதான். சாசாஆ 4 ல் 09.10.2019 தேதியில் ஒரு இடத்தில் மட்டும் ஜோதிலிங்கம் என்ற பெயர் குறிப்பிடபட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மீதமுள்ள இடத்தில் ஜோதிலிங்கம் என்று குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன நபர் எங்களது நிறுவனத்தில் என்ன தகுதியில் வேலை பார்த்தார் என்று கேட்டால் Breeding Farm – Incharge ஆக வேலை பார்த்து வந்தார், எங்களது நிறுவனம் 3 இடத்தில் இயங்கி வருகிறது. 3 Farm- க்கும் சேர்த்து தான் சம்பளம் வழங்கப்படுகிறது என்று சொன்னால்ச ரிதான். Farm Visit-க்கு தனியாக ரூ.1,000/- வழங்கப்படும். நான் சொல்வதுபொய் என்றும் மனுதாரர் இழப்பீடு வழங்க வேண்டி நான் மிகைப்படுத்தி கூறுகிறேன் என்றால் சரியல்ல. அந்த ரூ.1,000/- போக்குவரத்து செலவுக்காக கொடுக்கப்படுகிறதா என்றால் இல்லை, நான் சொல்வது தவறு என்றும் ரூ.1,000 சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. ரூ.1,000/- கொடுத்ததற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். ஆகவே இறந்துபோன ஜோதிலிங்கம் மாதம் ரூ.15,000/- சம்பளமாக பெற்றார் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள Service Certificate உற்பத்தி செய்யப்பட்டு மிகைப்படுத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**5 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

இறந்துபோன ஜோதிலிங்கம் Farm Visit செய்ததற்கு தனியாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் படி ஜோதிலிங்கத்திற்கு நிரந்தரமாக சம்பளம் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. இறந்த போன நபருக்கு நான் தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள சம்பளச்சான்று இழப்பீடு பெற வேண்டி மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி